காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை

15-5-66

விலை 20 காசு

கேள்வி--பதில்!

(1) இந்திய அரசு, சில தொழில்களுக்கான அனுமதியை ரத்துச் செய்திருப்பதன் காரணம் என்ன?

இந்திய நாட்டுத் தொழில் துறையில், ரத்துச் செய்துள்ள தொழில்களின் எண்ணிக்கை மிகுந்து, உற்பத்தி இலட்சிய இலக்கையும் மிஞ்சி, அதனால் விலை வீழ்ச்சி ஏற்பட்டு, ஆகவே இந்தியப் பொருளாதாரத்தின் ஒரு பகுதி பாழ்பட்டு விட்டதனால் என்று நீவிர் கருதினால் அது தவறானதாகும். இன்று ரத்துச் செய்வார்கள் — நாளை மறு பரிசீலனை செய்வார்கள். மறுநாள் அனுமதிப்பார்கள். இன்னொன்று தெரியுமா உங்களுக்கு? சில தொழில்கள் நடாத்த அனுமதி தேவையில்லையெனவும் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். பொறுத்திருந்து பாருங்களேன், பொருளாதார நிலை படும் பாட்டை!

(2) ஆணவம், அடக்க முடியாத ஒன்று என்ன?

யாரை மனதில் நினைத்துக் கொண்டு இவ்வினாவை விடுக்கிறீர்? 1967-ல் நீங்கள் எப்படி நடந்துகொள்கிறீர்களோ, அதனைப் பொறுத்துதான் இருக்கிறது, வினாவிற்கான விடை!

(3) தனி பஞ்சாப் மாநிலத்தில், தொழில் துறை அனைத்தையும் நாட்டுடைமை ஆக்கப் போவதாக பதேசிங் அறிவித்துள்ளாரே!

அனைத்து நாட்டின் எந்த ஒரு முற்போக்குக் கருத்தை நீங்கள் ஆதாரத்திற்குக் காட்டினாலும், இந்திய அரசு பிடித்தகொக்குக்கு மூன்று கால்கள் தான்!

(4) கழகத்தின், தேர்தல் உடன்பாட்டுக் கொள்கையைக் கண்டு எதற்காக கம்யூனிஸ்டுகள் குறை கூறுகிறார்கள்?

வாய் நிறைய ஜனநாயகம், சோஷலிசம் என்று பேசிப் பேசி, ஏமாந்த மக்களை இன்னமும் சுரண்டிக் கொழுக்க விரும்பும் காங்கிரசை, அதிகார பீடத்திலிருந்து இறக்கிவிடப் பெரும் முயற்சி செய்வது கழகம். அந்த வலிவு தமிழகத்தைப் பொறுத்த வரையில் கழகத்திற்கு உண்டு. காங்கிரஸ் உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் கருதுவதாகத் தெரிகிறது. ஒரு பக்கம் காங்கிரஸ் எதிர்ப்பு என்றும்—மற்றொரு பக்கம் கழகத்துக்கு எதிர்ப்பு என்றும் இப்படி இரட்டை வேடம் போடுவதன் காரணத்தை வெளிப்படையாகக் கூறக்கூடாதாயினும், காங்கிரஸ் முகாமை இயன்றவரையில் அது காப்பாற்றித் தருவதாக வாய்மொழி உத்திரவாரங்கள் கொடுத்துள்ளதோ எனவும் நினைக்க வேண்டியிருக்கிறது.

கம்யூனிஸத்தின் முதிர்ச்சி தான் சோஷலிசம் என்பார்கள்; சோஷலிசக் கொள்கையினை செயற்படுத்தும் நெறியிலும், முறையிலும்தான் கட்சிகள் வேறுபட்டுள்ளன. இதனைக் கம்யூனிஸ்டுகள் உணராமலும் இருக்க முடியாது. தொகுதி உடன்பாடுகள் மூலம், காங்கிரஸ் எதிர்ப்புச் சக்திகளை ஒன்று திரட்டிக்கொண்டு காங்கிரசை வீழ்த்திவிட்டால், நாம் கருதும், விரும்பும் திட்ட செயல்பாடுகளை அவசர,—அவசிய — சந்தர்ப்ப—முறைமைக்கேற்ப அமுல் செய்து கொள்வதிலே, நமக்குள் மிகுந்த மாறுபாடு இருப்பதற்கில்லை. எழும் மாறுபாடுகளும் களைந்து கொள்ள முடியாதன அல்ல!

இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் சமதர்மக் கொள்கை — பொதுவுடைமைக் கொள்கைகள்கூட—காங்கிரஸ்போல் உதட்டிலிருந்து தான் புறப்படுகின்றனவோ என்ற ஐயம் பிறக்கிறது. அந்த ஐயத்தை உறுதிப்படுத்துவது தான், கழகத்தின் கூட்டை, கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பதாகும்!

(5) ஏழை, எளிய ஊழியர்களைத் தேர்தலின்போது வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுப்பாரா காமராசர்?

மேடையிலே காரசாரமாக முழங்கிவரும் காங்கிரசின் சோஷலிசக் கொள்கைக்கு இப்படியொரு அறைகூவலை ஏற்கக் காமராசர் தயாராயிருக்கமாட்டார் என்பதை அறியாமலா இக்கேள்வியைக் கேட்கிறீர்?

(6) நாட்டின் தற்போதைய உணவு நிலைமை எப்படி இருக்கிறது?

ஒரிசா மாநிலத்தில் பயங்கரமான நிலைமை இருக்கிறதென்றும் 60 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; நூற்றுக்கணக்கான பேர் பட்டினிச் சாவுக்குப் பலியாகி இருக்கிறார்களென்றும் சில எம். பி.க்கள் அங்கு சென்றுவிட்டு வந்து கூறுகிறார்கள். உணவு அமைச்சர் மட்டும் இதனை மறுக்கிறார். அமெரிக்க உணவு உதவிக் கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களில் முகாமிட்டுள்ளனவாம்! "உணவுக் கிளர்ச்சிகள்" என்ற பத்திரிகைச் செய்திகளையும் காணோம்; என்றாலும் 1 கோடியே 20 இலட்சம் டன் உணவுப் பற்றாக்குறை இருப்பதாகவும் 50 இலட்சம் டன்கள் மட்டுமே வெளிஉதவி கிடைத்திருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

திங்கட்கிழமை இரவு இன்னமும் உணவு விடுதிகளை மூடிக் கொண்டுதானிருக்கிறார்கள்!

(7) மைக்கேல் ஸ்காட் நாடு கடத்தப்பட்டு விட்டாரே!

நாடு கடத்தப்படவில்லை; வெளியேற்றப்பட்டிருக்கிறார். உள்நாட்டு அரசியலில், அன்னியர் தலையிடு எப்படி இருக்கும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு!

(8) பிஜோ மலைவாசிகள், நாகா கலகக்காரர்கள் விஷயத்தில் காமராசரின் குரலையே காணோமே, ஏன்?

நீர் என்னய்யா, விவகாரத்தில் அவரைச் சிக்கவைக்க நினைக்கிறீர். "சிக்கெனப் பிடித்தேன்" என்று தேர்தல் விவகாரத்தில் ஈடுபட்டிருக்கிறார் அவர். இந்த நாட்டில் இப்படி இரு விவகாரங்கள் இருக்கிறதா? என்பதுகூட அவருக்குத் தெரியாது; தெரியத் தேவையுமில்லையே!

●

சாதனை என்ன?

எதிர்காலத்தில் எதையெதையெல்லாம் நம்மால் செய்ய முடியும் என்று நம்புகிறோமோ, அதைவைத்து நம் திறமையை நாம் எடைபோட்டுப் பார்க்கிறோம்; மற்றவர்களோ நாம் ஏற்கனவே சாதித்தவைகளை வைத்து நம்மை எடைபோட்டுப் பார்க்கிறார்கள்.

-லாங்பெலோ.

காஞ்சி

மலர் 2 15—5—66 இதழ் 42

முடிவு எதுவானாலும்....

ஆணவம் ஒன்றினாலேயே, அகிலத்தை அச்சுறுத்தும் ஒரு நிகழ்ச்சி கடந்த திங்கட்கிழமை யன்று செஞ்சீனாவின் மேற்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

அணுகுண்டா? ஹைட்ரஜன் குண்டா என்று இன்னமும் பிறநாட்டு வல்லுநர்களால் திட்டவட்டமாகக் கண்டறிந்து கூறமுடியாத மிகப்பெரிய, வன்மையும் சக்தியும் படைத்த வெடிகுண்டு ஒன்று அன்று செஞ்சீனாவால் சோதனை செய்துப் பார்க்கப் பட்டுள்ளது.

முதன் முதலாக 1964லும், அடுத்து 1965லும், மூன்றாவதாக இப்போதும் இம்மாதிரியான ஆயுதச் சோதனைகள் நடைபெற்றுள்ளன.

சீனாவின் அணுகுண்டுத் தயாரிப்புக்கு, நியூயார்க் நகரத்து விஞ்ஞானக்கூடத்தில் மாத ஊதியத்துடன், பயிற்சிபெற்ற ஜோன்சேஸ் ஹிண்டன் என்ற அமெரிக்கப் பெண்மணியின் ஒத்துழைப்பும், நுணுக்கத் திறனும், பெரும்பான்மையும் பயன்பட்டு வருவதாக, ரஷ்யாவும் பிறநாட்டு வல்லுநர்களும், கடந்த ஆண்டே கூறிவந்திருக்கிறார்கள்.

இந்தப் பெண்மணி கடந்த இரண்டாவது உலகப் போரின்போது 1945ல் நாகசாகியில் வீசப்பட்ட அணுகுண்டைத் தன் கரங்களால் நீவிவிட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார் என்றால், இவருக்கு மிகுந்த செஞ்சமூத்தமிருக்கவேண்டும்!

இவரது துணையும், உதவியும் கொண்டுதான் சீனா, அணுகுண்டுகளைத் தயாரிக்கிறது என்பதை சீனா மறுக்கவுமில்லை. இதுபற்றிய சர்ச்சையில் அது இறங்கி, தன் ராஜதந்திரத் தன்மைகளை அது வெளிப்படுத்தித் தீரவேண்டிய அவசியமுமில்லை, கட்டாயமுமில்லை. அது அந்நாட்டின் உள்நாட்டு விவகாரத்தையும், திறனையும் பொருத்ததாகும்.

ஆனால், உலக நாடுகளின் இன்றைய பொதுவான நிலையில், மற்றொரு அணு ஆயுதப் போரை, சந்தித்துத் தீரவேண்டுமென்பதை கெடுபிடியின் வாயிலாகவும், அச்சுறுத்தலின் மூலமாகவும் சீனா நடைமுறைப் படுத்திவருவதை, மனிதகுலத்தின் உயர்வான உயிரின் மீது, நல்லெண்ணமும், அக்கறையும் கொண்டோர், கண்டிக்காமலிருக்க முடியாது.

ரஷ்யாவும், அமெரிக்காவும் போட்டியிட்டுக் கொண்டு, அணுகுண்டுகளை நீருக்கடியிலும், நிலத்துக் கடியிலும் வானவெளியிலும் சோதனை செய்துகொண்டிருந்த வேளையில், அவை நீங்கலான அனைத்து நாடுகளும் தங்கள் தங்கள் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்து வந்துள்ளன.

இன்றைய புதிய மாற்றம், கண்டனத்துக்குள்ளான, அந்த இரு நாடுகளுமே, இன்றைக்கு செஞ்சீனாவின் இந்தக் கொடிய சோதனையைக் கண்டிக்கின்றன என்பதுதான். இதிலிருந்து, அவ்விருநாடுகளும், மற்றும் அணு ஆயுதத் தயாரிப்பு நாடுகள் என்பனவற்றில் இடம்பெற்றுள்ளனவாகக் கருதப்படும் பிரிட்டன், பிரான்ஸ் முதலியனவும்கூட இக்கொடுமையைச் சாடுகின்றன வென்பதிலிருந்து தெளிவாகப் பெறமுடிவது, அழிவுக் கருத்துக்களுக்கோ, ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கோ அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்பதனை அனைத்து நாடுகளும் ஒப்புக்கொள்கின்றன என்பதாகும்.

இந்நிலையில், சீனாவின் இந்த விஷமத்தனத்தை, அல்பேனியாவும், வடகொரியாவும் இத்தலையங்கம் எழுதப்பட்டுக்கொண்டுள்ள இந்த நேரம் வரையில், வெளிப்படையாக வரவேற்றுள்ளன.

செஞ்சீனாவோடு கூடிக்குலவும் பாகிஸ்தான், தன் உள்ளாசையை வெளிப்படையாக அறிவிக்காவிட்டாலும், அதன் அரசியல் வட்டாரங்கள் மிகுந்த அளவுக்குத் திருப்தியை வெளியிட்டுள்ளன. இதன்மூலம்; சீனாவின் இத்தகைய அணு ஆயுதக் கொள்கையை பாகிஸ்தானும் வரவேற்கிறது என்பது வெளிப்படை

இதே நேரத்தில், இந்தோனேஷியாவும் அணு ஆயுதம் தயாரிக்கும் என்று அதன் இராணுவத் தளபதி சுகார்த்தோ அறிவித்திருக்கிறார். மேற்கு ஜெர்மனியும் தயார் நிலையிலிருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

மொத்தத்தில் புதிய பல நாடுகள், வருங்காலத்தில் அணு ஆயுதங்கள் தயாரிக்கவிருக்கின்ற நிலைமையையும் இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டி இருக்கிறது.

உலகமெலாம் ஒன்றுகூடி, மனிதகுலத்தின் நாசத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற தம் உள்ளார்ந்த வேட்கையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிற அதே நேரத்தில், மற்றொரு மருங்கிலிருந்து இத்தகைய கெடுபிடிகளும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிற தான நிலை—மனித குலத்தை வாழவோ, நீடித்த அமைதிமிகுந்த—சமாதான நிலையில் வைத்திருக்கவோ செய்யாது என்பதுமட்டும் உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் புகழிலும் அமெரிக்க நாட்டின் செல்வாக்கிலும் ரஷ்யநாட்டின் சித்தாந்தக் கொள்கையில் தான்கொள்ளும் முரண்பாட்டிலும், செஞ்சீனா தன்னை உயர்த்திக் காட்டிக்கொள்ள கையாளும் பலவித வழிமுறைகளில் இதுவும் ஒன்று—என்ற அளவில், இந்தியாவும் சரி, பிற நாடுகளும் சரி வாளாவிருந்துவிட முடியாது.

(16-ம் பக்கம் பார்க்க)

தான் சொன்னதைக் கேட்டு செந்தாமரை வெளியே சென்றதும், அதைநினைத்துக் கலங்கிய சோலையப்பனை, அவள் வெகுநேரம் கலங்கவிடவில்லை.

கதவைத் திறந்துப் பார்த்துவிட்டு உடனே திரும்பினுள். அவன் அருகில் மிக நெருங்கி அமர்ந்தாள்.

"எங்கே செந்தாமரை...?"

"வெளியில் யாராவது இருக்கிருர்களா என்று பார்த்தேன்!"

'நிலாதான் இருக்கிறது. அதுவும் இங்கேயே இருக்கிறதே!' என்று எட்டி, அவளது கரங்களைப் பற்றினுன்.

"எனக்குக் கோபம் வரும்..."

கையை விடுவித்துக்கொள்ள அவள் திமிறினுள். அவனு விட்டுவிடுவான்?

"எனக்குக் கோபம் பொங்குகிறது!"

"எனக்குத்தாகம் மிஞ்சுகிறது!"

பொற்கரத்தை உதறிக்கொண்டு ஓடப் பார்த்தவளின் இடையில் கைகொடுத்து அருகில் இழுத்தான்.

"இதெல்லாம் என்ன?"

"இதெல்லாம்..." என்று சொல்லிக்கொண்டே அவளை இறுக மார்போடு அணைத்துக்கொண்டான்.

அவள் திமிறினுள்! முழு பலங்கொண்ட மட்டும் திமிறினுள்! முடியவில்லை! அவன் கன்னத்தில் பளீர் பளீர் என்று அடித்தாள்! ஆனுல் அந்த அடிகள் அவன் கன்னத்தில் விழுந்தபோது வேகமிழந்துவிட்டதைப்போல அவளுக்குத் தோன்றியது! காற்றிலே படபடத்த மேலாடையைப்போல, அந்தக் கன்னிப் பெண்ணின் மனம் பதைபதைத்தது! அவளுக்கு அழுகையும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தன!

வெறி கொண்டவனைப்போல, அவளது மாங்கனிக் கன்னங்களில் மாறி மாறி அவன் முத்தமிட்டான். 'என்னை விடு! விடு!' என்று கத்தினுள். 'அப்யோ!' என்று கண்ணீர் விட்டாள். ஆனுல் அவனது பிடியிலிருந்தோ, அணைப்பிலிருந்தோ, முத்தமாரியிலிருந்தோ அவளால் தப்ப முடியவில்லை.

செவ்விதழ்களில் அவன் முத்தமிட்டபோது, அவள் அசைவற்று நின்றுவிட்டாள்! ஏதோ ஒரு புதுமையான உணர்ச்சி, அங்க அவயவங்களில் எல்லாம் பாய்ந்தோடுவதாக உணர்ந்தாள். அந்த உணர்ச்சிவெள்ளத்திலே காலமெல்லாம் நீந்திக்கொண்டே இருக்கலாம்போல, அந்தக் குமரிக்குத் தோன்றியது!

அருகிலிருந்த மஞ்சத்திற்கு அவளை அழைத்துச் சென்றுன். கட்டுண்ட பாம்பைப்போல, அவன் உட்காரவைத்த இடத்தில் அவள் உட்கார்ந்தாள்.

அந்த மலர்மேனியாளை மடியில் சாய்த்துக்கொண்டு, 'கண்ணே!' என்றுன் போதை நிறைந்த குரலில் துடிதுடித்த அந்தச் செங்கனி உதடுகள், 'அத்தான்!' என்று முணுமுணுத்தன. முன்பு சோலையப்பன் சொன்னுனே—காதலர்களின் உள்ளத்துப் பசி அதிகமாகி உடல்கள் நெருங்கும்போது, வெண்ணிலா வெட்கத்தோடு மேகத் திரைக்குள் ஓடி ஒளிந்துகொள்வாள் என்று! ஆமாம், மேகத்திற்குள் புகுந்துகொண்டது, வெண்ணிலா!

கூந்தலைச் சரி செய்துகொண்டு கட்டிலைவிட்டுக் கீழே குதித்த அவள், கைகளால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பினுள்.

"அவர் என் பக்கத்தில் வந்தபோது நெருப்பாய்ச் சுட்டேன்; பேசியபோது பாம்பாய்ச்சீறினேன்! முடிவு என்னவாயிற்று? ஏதோ ஒரு மாயசக்தி, என்னை அவர் மடியில் துவளும்படிச் செய்துவிட்டது!" என்று சிதாரி சொன்னது, அவள் காதுகளில் வந்து ஒலித்தது.

கசங்கிக் கீழே கிடந்த ஒரு மலரைக் காலால் எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு, முகம் நிமிர்ந்து வெறுப்போடு சோலையப்பனைப் பார்த்தாள். அவனது புன்னகை அவளைத் தலைகுனியச் செய்தது!

"நான் வருகிறேன் செந்தாமரை!"

சிறிதுநேரம்மௌனமாக இருந்துவிட்டு, ஏதோ சொல்ல அவள் விழியை உயர்த்தியபோது—அவன் அங்கே இல்லை!

"ஏதோ மயக்கம்! எப்படியோ நடந்துவிட்டது! இனி இவர்தானே ......"

அவளது இதயத்தில் ஒரு குரல் மெள்ளப் பேச ஆரம்பித்தது, கண்கள் வானத்து நிலவைப் பார்த்தன.

"அய்யோ! மாலை இவர் சொன்னதை, அந்தத் தூமகேதுவிடம் சொல்லிவிட்டேனே என்றெண்ணியதும், அவள் மனம் பகீர் என்றது!

இருபத்துநாலாம் பகுதி

தீயே சுட்டுப் பொசுக்கு

காலை எழும் செங்கதிரவனைப் பார்த்தபடி, சேல்விழிகளில் நீர் ஊற்றெனப் பெருக, சோகத்தின் பிம்பமாய் உப்பரிகையில் செந்தாமரை நின்றிருந்தாள்.

"வண்ணமலர் வாசம் இழந்துவிட்டது! வானவில் நிறமிழந்துவிட்டது! ஆமாம், செந்தாமரை தன் மதிப்பை இழந்துவிட்டாள்! இந்த உலகையே துரும்பாகமதித்து நட்சத்திரங்களின்மீது தாவிக் குதித்து நடந்தாளே — ஆண்களை அலட்சியத்தோடு ஏறிட்டுப் பார்த்தாளே-அந்தச் செந்தாமரை நேற்றிரவே செத்துவிட்டாள்!

நான் சோலையப்பனைச் சாய்க்க நினைத்தேன்—சாகசம் செய்தேன்! என் அழகிலே அவர் மயங்கினுர்—அவர் அணைப்பிலே நான் மயங்கினேன்! யாரை நான் அழிக்க வேண்டுமென்று நினைத்தேனே — அவரே என் அத்தான்ஆகிவிட்டார்! வஞ்சகதூமகேதுவின் வலையில்என் இதயமலர் சிக்கிவிடக்கூடாதே—

(13-ம் பக்கம் பார்க்க)

தம்பி

எனக்காக அல்ல — என் இலாபத்துக்காக அல்ல—ஏழை எளியவர்களுக்காக—இல்லாது இடர்ப்படுவோர்களுக்காக — சாவடி கட்ட—ஆகவே விலை குறைவு என்று தயங்காதே—நல்ல காரியத்துக்காக — தர்மத்துக்காக புண்ணிய காரியத்துக்காகக் கொடு!

உருக்கமாகப் பேசுகிறார்; மறுக்க முடியாத 'நியாயம்' எடுத்துக்காட்டுகிறார் தண்டாயுதபாணி கோயில் தர்மகர்த்தா — ஆறு ஆயிரம் மதிப்புள்ள 'சதுரத்தை' இண்டாயிரத்துக்குத் தந்துவிடும்படி **விளங்கானூராரிடம்.**

விலை மிகவும் குறைத்துக் கேட்கிறார். நாலு ஆயிரத்துக்கு முன்பு ஒருவர் கேட்டார், ஆறுக்கு அரை பைசா குறையாது என்று அடித்துப் பேசினோம். வேறு ஒருவரும் இவ்வளவு குறைவாக விலை கூறமாட்டார்கள். ஆனால்...... தர்மகாரியம் என்கிறா; புண்ணியம் கிடைக்கும் என்கிறார்; சாவடி கட்ட என்கிறார்; எப்படி மறுக்க முடியும் — ஒரே குழப்பமாக இருக்கிறதே என்று எண்ணி ஏக்கப்படுகிறார் **விளங்கானூரார்.**

உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்!

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பார்த்தால் அந்தச் சதுரத்தில் **'தண்டாயுதபாணி மாளிகை'** தெரிகிறது. ஒரு நாள் தங்க வாடகை இருபத்தி ஐந்து ரூபாய் என்று குறிப்புப் பலகை தொங்குகிறது. 'அறை காலி இல்லை' என்ற அறிவிப்புப் பலகையும் தொங்கவிடப்பட்டிருக்கிறது. சாவடி கட்ட! ஏழைகளுக்காக! தர்மகாரியத்துக்காக!!— என்று மயக்கி, சதுரத்தை மிகக் குறைந்த விலைக்கு வாங்கியவர், உயர்தரமான உணவு விடுதி கட்டிக் கொழுத்த இலாபம் அடைகிறார்.

'மாளிகை'யிலே பெரிய பெரிய புள்ளிகள் வந்து தங்குகிறார்கள்; கும்பாபிஷேகம் காண வந்தவர்கள் அல்ல! கள்ளச்சரக்கு வியாபாரம் செய்வோர்!! ஊருக்குத்தெரிகிறது; ஆனால் அதிகாரிகளிடம் தருவதற்கான ஆதாரங்கள் மட்டும் எவர் கரமும் சிக்குவதில்லை; அவ்வளவு திறமையாக நடத்தப்படுகிறது திருட்டு வேலை.

தர்மகாரியம் — புண்ணியகாரியம் — என்று மயக்கமூட்டும் பேச்சுப் பேசி, விவரமறியாதானை வலையிலே விழச்செய்து, இலாபவேட்டையாடிடும் வஞ்சகத்துக்கும் நாங்கள் ஜனநாயக சோஷியலிசத்தைத் தந்திடப்போகிறோம், ஏழையை வாழவைக்கப் போகிறோம் என்று ஆசை வார்த்தையை ஊட்டி, ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக்கொண்டு, ஏழையைக் கசக்கிப்பிழிந்து கொழுத்திடும் செல்வவான்களுக்குத் தங்கள் 'முதுகை'க் கொடுத்து அவர்கள் வீசிடுவதை வழித்தெடுத்துச் சுவைத்திடும் போக்குக்கும் அதிக வித்தியாசமில்லை. அளவிலே அவை வேறுவேறு; தரத்திலே இரண்டும் ஒன்றுதான்.

களவு என்று எண்ணாதே குழந்தாய்! உனக்கு நற்கதி தந்திடவே நாம் இதனைச் செய்தோம். செல்வம், மனதை மயக்கும்; பண்பை அழிக்கும்; கடவுளிடம் கொண்டிட வேண்டிய பக்தியினை அழித்தொழிக்கும்.



பணம், பாபத்தின் சின்னம்! அதிலே பற்றும் பாசமும் மிகுந்திடின் பாபத்தின் பிடியிலே சிக்கிக்கொள்வாய்!

மகனே! உன்னைப் பாபத்தின் பிடியிலிருந்து விடுவிக்கவே நாம் உன் பொருளைப் பறித்துக்கொண்டோம். சென்று சிவனருளை நாடு!

என்று வழிப்பறி நடத்தியவன் பேசிடின் அதற்குப் பெயர் 'உபதேசம்' என்றாகுமா! சூது! வஞ்சகம்! சூழ்ச்சி!

ஆனால் பாபபுண்ணியம்பற்றி உருக்கத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஏய்த்திடுவோர்போல, ஆட்சியில் அமர்ந்திடுவோர் மயக்க மூட்டும் பேச்சினை வீசி மக்களைத் தம் பக்கம் ஈர்த்துக் கொண்டு, பிறகு அந்த மக்களுக்கே கேடு செய்திடத் துணிகின்றனர்.

காங்கிரசாட்சியினர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம், இதுபோன்றதோர் சூழ்ச்சியாகவே இருந்து வருகிறது.

போலிப் பேச்சு — அல்லது மயக்கமூட்டும் பேச்சு அல்லது சூழ்ச்சிப் பேச்சு காங்கிரசாட்சி பேசிடும் சோஷியலிசம் என்பதை நன்கு உணர்ந்துகொண்டிருப்பதால்தான், சீமான்கள் காங்கிரஸ் கட்சியில் அச்சமின்றி இருந்து வருகிறார்கள்.

உண்மையிலேயே காங்கிரசாட்சி சோஷியலிசத்தை நடைமுறைக்குக்கொண்டு வந்துவிடும் என்ற நிலைமை இருந்திடின் இத்தனை முதலாளிகள் காங்கிரஸ் முகாமிலே இருந்துவருவார்களா! தற்கொலை செய்துகொள்ளச் சம்மதிப்பார்களா!

ஒரு புதுவரி தமக்குப் பாதகமான முறையிலே போடப்பட்டுவிட்டால் காட்டுக்கூச்சலிட்டு, எதிர்ப்புக் கிளப்பி, அந்த வரி எடுபடுகிற வரையில் புயலைக் கிளப்பியபடி இருக்கும் இயல்பு படைத்த முதலாளிகள், தங்கள் வாழ்க்கை முறைக்கே உலைவைக்கக் கூடிய திட்டமான சோஷியலிசத்தைக் காங்கிரசாட்சி மேற்கொள்வதாக அறிவித்தது கேட்டு வாளாகவா இருப்பார்கள்! தேளாகிக் கொட்டுவார்களே! ஆனால் அவர்கள் ஒரு துளியும் கவலைப்படாமலல்லவா இருக்கிறார்கள்! ஏன்? அவர்களுக்கு நன்றாகத் தெரியும் காங்கிரசாட்சி பேசிடும் சோஷியலிசம், மக்களை மயக்கவே தவிர, தங்கள் ஆதிக்கத்தை மாய்க்க அல்ல என்ற உண்மை.

நிலத்துக்கு உச்சவரம்பு கட்ட சட்டம் வரும் என்று தெரிவித்ததும், எவ்வளவு எதிர்ப்பு, ஆர்ப்பரிப்பு செய்தனர் இந்தப் பிரபுக்கள்! இன்று சோஷியலிசம் பேசப்படுகிறது; கவலையற்று இருக்கிறார்கள் என்றால் காரணமற்றா?

ஆதரித்தே கூடப் பேசுகிறார்கள் சீமான்கள்; வரட்டுமேசோஷியலிசம் என்று! ஏன்? அவர்கள் மிக நன்றாக அறிவார்கள், காங்கிரசாட்சி சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வராது என்பதனை.

அமெரிக்கத் தலைவரொருவரைக் கேட்டனர் அந்நாட்டு முதலாளிகள், இந்தியாவுக்குக் கடன் கொடுங்கள் தாராளமாக; ஏராளமான 'முதல்' போட்டுத் தொழில் நடத்துங்கள் என்று கூறுகிறீர்களே, இந்தியாவிலே காங்கிரஸ் அரசு, சோஷியலிசத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறதே, அந்த நிலையில் நாங்கள் எப்படி 'முதல்' போடமுடியும் என்று.

அமெரிக்கத் தலைவர் சொன்னார், இந்தியாவில் காங்கிரசாட்சியினர் பேசிடும் சோஷியலிசத்தைக் கண்டு பயப்படாதீர்கள்! அந்தச் சோஷியலிசம் நம்மை ஒன்றும் செய்துவிடாது என்று.

விவரம் தெரிந்தவர்கள், காங்கிரஸ்கட்சியின் அமைப்பை அறிந்தவர்கள், நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள், பேசப்படும் சோஷியலிசம் போலி என்று. ஆனால் பாமரருக்கு அந்தப் பேச்சு தித்திப்புத் தரும் என்பதைத் தெரிந்துகொண்டுதான் காங்கிரஸ் தலைவர்கள், ஓயாமல் சோஷியலிசம் பற்றிப் பேசுகிறார்கள்; காங்கிரஸ் ஆதிக்கத்தை எதிர்ப்பவர்களெல்லாம் சோஷியலிச விரோதிகள் என்று பழியும் சுமத்துகிறார்கள்.

எவரெவர் சோஷியலிசம் ஏற்பட்டால் ஆதிக்கத்தை, உடைமைகளை சுகபோகத்தை இழந்தாகவேண்டி நேரிட்டுவிடுமோ அவர்களெல்லாம் வாய் மூடிக்கொண்டிருக்கிறார்கள்—சோஷியலிசத்திட்டத்தை எதிர்க்காமல்.

சோஷியலிசம் ஏற்படின், அதனால் நிரம்பப் பயன் அடையக்கூடிய ஏழை எளியோர் நடுத்தரக் குடும்பத்தினர் மிகப் பெரும் அளவு இடம் பெற்றுள்ள கழகம், நம்முடையது. உள்ளபடி சோஷியலிசம் நடை

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்ககுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'

மற்றும்

'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

முறைக்குவரும் என்றால், நாமல்லவா மகிழ்ச்சியால் துள்ளுவோம்; திட்டத்தை வரவேற்போம்.

நாம், அவர்கள் சோஷியலிசம் பேசுவதையும் பார்க்கிறோம்; அதேபோது சோஷியலிசப் பகைவர்கள் அந்த முகாமிலே மூலவர்களாக இருப்பதையும் காண்கின்றோம். எனவேதான், வெறும் மயக்கமூட்டும் பேச்சு இது என்று கூறுகிறோம்.

சோஷியலிசம் பேசி மக்களை ஏய்ப்பதனை எதிர்க்கிறோம்; சோஷியலிச திட்டத்தை அல்ல.

ஆரோக்கியசாமி என்ற பெயருள்ள ஒருவர் அக்ரமம் செய்திடக்கண்டு கண்டித்தால், உடனே ஆரோக்கியத்தைக் கண்டிக்கிறோம், வெறுக்கிறோம் என்றுபொருள். பித்தரும் கூறமாட்டார் இதுபோல. ஆனால் பெரிய தலைவர்கள் பேசுகிறார்கள், கழகம் சோஷியலிசத்தை எதிர்க்கிறது என்று.

ஆறாயிரம் மதிப்புள்ள சதுரத்தை இரண்டு ஆயிரம் கொடுத்துத் தட்டிக்கொண்டு போகத் தந்திரம் செய்பவனைக் கண்டித்தால், உடனே அவன், நாம் 'சாவடி' கட்டும் புண்ணிய காரியத்தைத் தடுக்கிறோம், எதிர்க்கிறோம் என்று பேசப் புறப்படுவது.

ஆனால் காமாராஜர், இந்த அபத்தப் பேச்சைத்தான் அள்ளி அள்ளி வீசுகிறார், ஊரூருக்கும்.

நான் ஏழை பணக்காரன் வித்தியாசத்தைப் போக்கப் பாடுபடுகிறேன், அதனை இந்தக் கழகத்தான் எதிர்க்கிறான் என்றாராம், பெரியவர்!

ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தைப் போக்க இவர் வைத்துக்கொண்டுள்ள திட்டம் என்ன? சொல்லட்டுமே பார்ப்போம்.

திட்டவட்டமாக அவர் தமது ஏற்பாட்டினைக் கூறட்டும், அது போலியாகிப்போய்விடாது என்பதை விளக்கட்டும், பிறகு அந்தத் திட்டத்தைக் கழகத்தினர் எதிர்க்கிறார்களா என்று பார்க்கட்டும்.

நான் ஏழை பணக்காரன் பேதத்தைப்போக்க இன்ன திட்டம் தீட்டினேன், அதனை இந்தக் கழகத்தான் எதிர்த்தான் என்று எடுத்துக்காட்டி மெய்ப்பிக்கட்டும், பார்ப்போம்.

ஓட்டை ஒடிசல் உள்ள முறையிலே தயாரிக்கப்பட்டது என்றபோதிலும் நிலத்துக்கு உச்சவரம்பு கட்ட சட்டம் வந்தபோது கழகம் வரவேற்றது; நாடு அறியாதா இந்த உண்மையினை.

நிலப்பிரபுக்கள் தப்பித்துக்கொள்வதற்கான ஓட்டைகள் சட்டத்திலே இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டிற்று, கழகம்.

உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள, நிலப்பிரபுக்கள் செய்திடும் சூழ்ச்சிகளை விளக்கிக் காட்டிற்று.

உச்சவரம்புச் சட்டத்தை ஏய்க்க, நிலப்பிரபுக்கள் செய்துகொண்ட நிலப் பிரிவினைகள், சூதானவை, புரட்டானவை என்பதனைக் கழகம் அம்பலப்படுத்திற்று.

இந்த முறையிலே கழகம் நடந்துகொண்டதே தவிர, நிலத்துக்கு உச்சவரம்பு கட்டவே கூடாது, அப்படிப்பட்ட சட்டம் தவறானது, என்று கூறிற்றா? எதிர்த்ததா? எடுத்துக்கூறச் சொல்லட்டுமே பார்க்கலாம்.

நில உச்சவரம்புச் சட்டத்தை வரவேற்று அந்தச் சட்டம் மேலும் செம்மையானதாக்கப்பட வேண்டும், அதில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்படவேண்டும் என்று வாதாடிய நமது கழகமா சோஷியலிசத்தை எதிர்க்கும் கழகம். பேதையும் இதனை நம்பமாட்டானே! ஆனால் பெரிய இடத்தைப் பிடித்துக்கொண்டவர் பேசுகிறார் இப்படி ஒரு அபத்தத்தை.

இவர் போன்றாரே, சோஷியலிசப் பகைவர்கள் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறோம்.

இவர்போன்றார் கூடிக் குலவுவதும் தேடிப்பெற்று மகிழ்வதும் முதலாளிகளை என்று மெய்ப்பித்துக் காட்டிக்கொண்டு வருகிறோம்.

கபிஸ்தலமும் வாண்டையாரும், வடபாதியும் நெடும்பலமும், செய்யூரும் பிறவும், காங்கிரசின் கொலுமண்டபத்திலே நாயகர்களாக இருந்து வருவதைக் காட்டுகிறோம்.

சீமான்களுக்காக இந்த ஆட்சியிலே தொடர்ந்து செய்யப்பட்டுவரும் வசதிகள் எவையெவை என்பதனை எடுத்துக்காட்டி வருகிறோம்.

இந்த ஆட்சியின் துணைபெற்று எவ்வளவு வேகமாக முதலாளித்தனம் வளர்ந்துகொண்டு வருகிறது என்பதனை விளக்கிக் காட்டுகிறோம்.

இந்த ஆட்சியின் தயவினால் இலாபவேட்டை நடத்துபவர்கள், அந்த ஆட்சியை நடத்திடும் கட்சிக்கு, கோடிக்கணக்கிலே 'நிதி' தந்து வருவதற்கான புள்ளிவிவரத்தைக் காட்டுகிறோம்.

இவ்விதமாக, காங்கிரஸ் நடத்திடும்கபடத்தை உடைத்தெறியும் கழகமா சோஷியலிசம் வேண்டாம் என்று கூறிடும். மந்த மதி படைத்தவனும் ஏற்கமாட்டானே! ஆனால் பேசுகிறாரே, பெரியவர்!! ஏன்? எதையும் பேசலாம் என்றநிலை தமக்கு இருக்கிறது என்ற நினைப்பினால்.

சோஷியலிச தத்துவத்துக்கு முரணாக முதலாளித்துவத்துக்கு அரணாக இருந்து வரும் மோட்டார் பஸ்தொழிலை தனிப்பட்ட முதலாளிகளிடம் விட்டுவைக்காமல், சர்க்கார் ஏற்று நடத்தவேண்டும் என்ற மசோதாவைக் கழகம் கொண்டுவந்தபோது எதிர்த்து மாய்த்தவர்கள் யார்? இதே காமராஜர் கட்சி அல்லவா? அன்று சோஷியலிச திட்டத்தைப் பதைக்கப்பதைக்கப்படுகொலை

செய்துவிட்டு இன்று சோஷியலிசம் பேசி னால், யார் நம்புவார்கள்!

கூட்டிவைத்துக் கேட்கவில்லையா இந்த மகானுபாவர்கள், பஸ்முதலாளிகளை,

பிழைக்கப்போகிறீர்களா

சாகப்போகிறீர்களா?

காங்கிரசாட்சி ஏற்பட்டால், பிழைத்திருக்கமுடியும்!

எதிர்க்கட்சி வெற்றிபெற்றால், செத்தீர்கள்.

என்ன சொல்லுகிறீர்கள்?

என்ன செய்யப்போகிறீர்கள்?

சாகப்போகிறீர்களா, அல்லது பிழைக்கப்போகிறீர்களா?

பிழைக்க விரும்பினால் காங்கிரசுக்கு நிதி கொடுங்கள்! கழகத்தைத் தோற்கடியுங்கள்.

என்றெல்லாம். இது உலகறிந்த இரகசியமல்லவா!

அமைச்சர்பிரான்களின் ஊர்வலங்கள், பெரியவரின் பவனி இவற்றின்போது ஊருருக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு அமைக்கப்பட்ட அலங்கார வளைவுகளிலேயே, இது இன்ன பஸ் முதலாளியின் உபயம் —அன்பளிப்பு—என்று பொறிக்கப்பட்டதில்லையா! அதை மக்கள் காணவில்லையா! மக்கள் இவைகளை அடியோடு மறந்தா போய்விடுவார்கள்!

மக்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார்கள் புதிய புதிய தொழிற்சாலைகள் கிளம்புவதை; பொட்டலெல்லாம் புது நகர்களாக மாறுவதை; அவ்வளவும் முதலாளிகளின் பாசறையாக இருப்பதனை.

இந்தப் புதிய வளர்ச்சி முதலாளிகளுக்கு ஏற்பட்டிருப்பது காங்கிரசாட்சியினால்தான் என்பது மக்களுக்குத் தெரியாதா!

இரத்தக் கறை படிந்த கரமுடையான் அகிம்சை பற்றிய புதிய அகவலை அரங்கேற்றுவதுபோல, திட்டமிட்டு முதலாளித்துவத்தை வளர்த்துக் கொண்டுவரும் இவர்களா பேசுவது சோஷியலிசம்பற்றி! அந்தப் புனிதமான கோட்பாட்டைப் பற்றிப்பேச இவர்களுக்கு அருகதை ஏது?

ஆனால் பேசுகிறார்கள்; ஏமாளிகள் நம்பட்டுமே; நம் பாதவர்கூட நம்மை எதிர்த்தா கேட்கமுடியும்! நமது செல்வாக்கென்ன, அதிகார பலம் என்ன, பளபளப்பு என்ன!! இவற்றினைக் கண்டதும் அவர்களுக்குத் தன்னாலே வாயடைத்துப் போய்விடாதா, என்ற நினைப்பு.

தம்பி! காங்கிரசினால் சோஷியலிசத்தை நடைமுறை ஆக்க முடியாது; அந்த உறுதியோ விருப்பமோ அவர்களுக்குக் கிடையாது என்பதற்கு விளக்கமளித்திட ஒன்று கூறுகிறேன்.

இரண்டு திங்களுக்கு முன்பு கோடீஸ்வரரான **பிர்லா** தம்மையொத்த பெருவணிகர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்!

நமக்கு '(முதலாளிகள்—தொழில் அதிபர்கள்) ஏற்ற சர்க்கார் காங்கிரஸ் சர்க்கார் தான்.

நாம் காங்கிரஸ் சர்க்கார் அமைவதற்குப் பாடுபடவேண்டும்; ஆதரவு அளிக்க வேண்டும் என்று.

காங்கிரஸ் சோஷியலிசம் ஏற்படுத்தும் என்று தெரிந்தால் **பிர்லா** இவ்விதம் பேசியிருப்பாரா?

பிர்லா விரும்பி வரவேற்கும் ஆட்சி சோஷியலிச ஆட்சியாகவா இருக்க முடியும்!

என்ன விளக்கமளிக்கிறார்கள் இந்த விந்தைக்கு — பிர்லாவின் ஆதரவுக்கு!

சிந்தையில் கள் விரும்பி சிவசிவா என்பது போல,

முதலாளித்தனத்தை வளர்த்துக்கொண்டே, சோஷியலிசம் பேசுகிறார்கள். இதனைப் பண்டித நேருவின் உடன்பிறந்தார் விஜயலட்சுமி அவர்களே உடைத்துக் காட்டினார்களே,

காங்கிரஸ் பேசும் சோஷியலிசம் உதட்டளவுதான் என்று.

உதட்டளவுதான் இவர்கள் பேசும் சமதர்மம் என்று நாம் கூறினால், கூரைக்குத் தாவிக் கொக்கரிக்கிறாரே காமராஜர்; வாய் திறக்கிறாரா, அம்மையார் பேசியது கேட்டு. கிலி! சுடச்சுட ஏதாவது கொடுத்துவிடப் போகிறார்கள், செம்மையாக என்ற பயம். ஓடோடி வருகிறார், இங்கு! நம்மை ஏச!! உதட்டளவுதான் நமது சோஷியலிசம் என்று அங்கே உலகப் புகழ் ஈட்டிய அம்மையார் குட்டுகிறார்; அது மோதிரக்கை என்பதாலே இவர் பட்டுக்கொள்கிறார்; துடைத்துக் கொள்ளக்கூடத் துணிவற்று. பேசச்சொல்லுங்கள் கழகத்தைப்பற்றி, ஏ! அப்பா! வாய் எத்தனை அகலமாகிவிடுகிறது! வார்த்தை எவ்வளவு நாராசத்தில் தோய்த்து எடுத்து வீசப்படுகிறது!

தம்பி! காங்கிரஸ் கட்சி பேசிடும் சோஷியலிசம் போலி என்பதை உணர்ந்து, காங்கிரசிலேயே ஒரு பகுதியினர்

காங்கிரஸ் சோஷியலிச அணி

என்று ஒரு உள் அமைப்பே நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

வெட்கம் துளி இருந்தால், ஏ! போக்கிரிகளே! காங்கிரசே சோஷியலிசத்தைத் தன் திட்டமாக, கொள்கையாகக் கொண்டு நடந்துகொள்கிறபோது, காங்கிரசிலேயே இருந்துகொண்டு, சோஷியலிச அணி என்ற உள் அமைப்பை நடத்தலாமா; ஊர் என்ன சொல்லும், உலகம் என்ன சொல்லும்; காங்கிரசிலே மிகப் பெரும்பகுதியினர் உண்மையான சோஷியலிஸ்டுகள் அல்ல என்றல்லவா பேசும்; இப்படி கட்சிக்கே ஒரு இழுக்கைத் தேடிக்கொடுக்கிறீர்களே; இது கட்டுப்பாட்டையே குலைத்துவிடுவதாகுமே; மரியாதையாக சோஷியலிச உள் அமைப்பைக் கலைத்துவிடுங்கள்; இல்லையென்றால் கட்சியைவிட்டு வெளியே செல்லுங்கள் என்றல்லவா காங்கிரசின் தலைவர் கட்டளை பிறப்பிப்பார்! செய்யச் சொல்லுங்கள், பார்ப்போம்! பீடமே ஆடிப்போகும்! ஆகவே, உள்ளே இருந்துகொண்டு அவர்கள் குட்டுகிறார்கள்; இவர் அந்த எறிச்சலை இங்கே கொண்டுவந்து கொட்டுகிறார், கொடிபிடித்தானூரிலும் கொடுத்தானூரிலும்.

இவர்கள் பேசுவது போலி சோஷியலிசம், நாங்கள்தான் உண்மையான சோஷியலிசத்தைக் கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லுவதாகத்தானே

பொருள் — காங்கிரசுக்குள்ளேயே ஒரு சோஷியலிச அணி செயல்படும் விந்தை. ஆஹா நம்மோடு இருப்பவர்களே நம்மைப்பற்றிச் சந்தேகப்படுகிறார்களே என்று பதறுகிறாரா? எப்படிப் பதறுவார்! அவர்கள் தான் தயாராக இருக்கிறார்களே, வெளியே சென்று இவர்களின் போலி சோஷியலிசத்தை வெளுத்துக் கட்ட—அந்தப் பயத்தால், பெட்டிப் பாம்பாகிவிடுகிறார்! இங்கு வந்து சீறுகிறார்!!

> **சோஷியலிசம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ளாமல், வாயால் சோஷியலிசம் பேசிக் கொண்டிருக்காதீர்கள்.**
>
> **சோஷியலித்திலே நம்பிக்கையில்லாத மந்திரிகளை, மந்திரிசபையிலிருந்து வெளியேதுரத்தியாக வேண்டும்.**

என்று தம்பி! நான் சொன்னால் காங்கிரசின் மாபெருந்தலைவர் மட்டுமல்ல, கையேந்திகள் கூடக் கடுங்கோபம் கக்கிட முனைவது காணலாம்! எமது மந்திரிகளுக்கா சோஷியலிசம் புரியவில்லை! அவர்களுக்கா சோஷியலிசத்தில் நம்பிக்கை இல்லை! அப்படிப் பேசிடுவோன் நாவினைத் துண்டித்துக் காக்கை கழுகுக்கு விருந்திடுவேன்! இன்றே! இப்போதே! இதோ! என்று ஆவேசமாடிடுவர்.

ஆனால், நான் அல்ல, இதனைக் கூற முன்வந்தது. பாராளு மன்றத்தில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் பேசியதை நான் எடுத்துக் காட்டுகிறேன். அமைச்சர் கொலு வீற்றிருந்த அவையில், வெளிநாட்டு இதழ்களின் நிருபர்கள் குறிப்பெடுக்கும் அந்த அவையில், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்களோ என்பது பற்றித் துளியும் அஞ்சாமல், மார்ச் 12ந் தேதி டி. சி. சர்மா எனும் காங்கிரஸ் உறுப்பினர், இது போலப் பேசினார்.

> ஐயன்மீர்! நீங்கள் சோஷிலிசம் பேசுகிறீர்களே தவிர, அதன் பொருளை உணரவில்லையே!
>
> ஏடுகளிலும் பல நாடுகளிலும் அறிவாளர்கள் சோஷியலிசத்திற்குத் தந்துள்ள பொருளுக்கும் உமது வியாக்யானத்திற்கும் துளியும் பொருந்தவில்லையே!
>
> சோஷியலித்தின் பொருளைப் புரிந்து கொண்டா பேசுகிறீர்கள்

என்று நாம் மிகப் பணிவுடன் பேசிடுவது கேட்டாலே, காங்கிரஸ் தலைவர்கள் பெருத்த குரலெடுத்து ஏசுகிறார்கள், ஆத்திரத்தைக் கொட்டுகிறார்கள். பாராளு மன்றத்திலேயே பலமான சவுக்கடி கொடுக்கிறார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்; துடைத்துக்கொண்டு விடுகிறார்களே! மற்றவர்களைக் கேட்கிறார்கள், மானம் இல்லையா!—என்று!!

சோஷியலிசம் வெற்றி பெறவேண்டுமென்றால், முதலில் உழுபவனுக்கே நிலம் என்ற கொள்கை நடைமுறையாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்திய போது நெடுங்காலம் அதனை எதிர்த்துக் கேலிபேசிக் கொண்டிருந்தவர்தான் இந்தக் காமராஜர். அவருடைய பொன்மொழி ஊரறியுமே, தம்பி! உனக்குக் கவனமில்லையா!

> உழுபவனுக்கு நிலமா!
>
> அப்படியானால் நடப்பவனுக்கு ரோடா!
>
> ஏறுபவனுக்கு இரயிலா!
>
> இருப்பவனுக்கு வீடா!

என்று வக்கணை பேசிக்கொண்டிருந்தார்.

ஆனால் நாட்டுமக்கள் வெகுவேகமாக சோஷியலிசத்தின் பக்கம் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்று கண்டுகொண்டதும், "சோஷியலிசமா! நாங்களே அதனைத் தருகிறோம்!!" என்று பேசத் தொடங்கினர்.

> சோப்பு வேண்டுமா சீப்பு வேண்டுமா, ஆடும் பொம்மை வேண்டுமா அலங்காரச் சட்டைவேண்டுமா என்று தன்னிடம் உள்ள சரக்குகளை விற்றிட சந்தைக்கடைக்காரன் நச்சரித்தான். தொல்லை தாளமாட்டாமல் ஒருவன், எனக்கு ஒரு சாமானும் வேண்டாம்; தொல்லைசெய்யாதே; போ! போ! மேலும் தொல்லைகொடுத்தால், போலீஸ் காரரைக் கூப்பிட்டு உன்னை ஒப்படைத்து விடுவேன் என்றானாம்.
>
> தந்திரக்கார வியாபாரி பயந்துவிடவுமில்லை, சலித்துவிடவுமில்லை.
>
> ஒரு ஊதுகுழலை எடுத்துக்காட்டி, இதோ ஊதுகுழல்! போலீஸ்காரரைக் கூப்பிட உதவும். எட்டணாதான் விலை! வாங்கிக் கொள்ளுங்கள் என்றானாம்.

தம்பி! காங்கிரஸ் கட்சியை நடத்திச் செல்பவர்கள் அதுபோன்ற தந்திரத்தை மேற்கொள்பவர்கள்! அத

இயம்பட்டும் இல்லையென்று!

"சற்றேனும் பதவிவெறி எங்கட் கில்லை!
சாசனத்தில் அதையெழுதி வைக்க வில்லை!!
சாற்றுகிறார் பதவிக்கு, வெறிபிடித்த,
சாகசங்கள் புரிகின்றோம், என்றே எம்மை!!

தொல்லுலகே! உன்துயரைத் தீர்ப்ப தற்கே
துரைமகனார் எம்கையில் ஆட்சிக் கோலை
செல்லுபடி யாமுறையிற் சேர்த்துப் போனார்;
செகத்தீரே! மறந்தீரோ எங்கள் சேவை!"

என்கின்றார் காங்கிரசுத் தலைவர்! ஏடா
என்னென்ன கற்பனைகள்!! இதயத் துள்ளே!
மன்பதையில் மாந்தர் உயிர் வாழு மட்டும்
மாமேதை **காமத்து ராசர்** கட்சி

அம்புவியை, இந்தியரின் இந்தி யாவை
ஆளுதர்க்கும் ஆளுகிற உரிமை கட்கும்,
சம்பவங்கள் பற்பலவும் நிகழ்த்து தற்கும்,
சரித்திரங்கள் படைத்தற்கும், சாம பேத

தானவகை தண்டங்கள் ஆற்று தற்கும்
தாரணியோர் மானமரி யாதை கெட்டு
ஞானநெறி, நல்லறிவு ஒழிவ தற்கும்
நாட்டினிலே தம்கட்சி வேண்டு மென்றே

ஆண்டறுபத் தேழ்தனிலும் தேர்தல் தன்னில்
அகலாது பங்கேற்க வருகின் றாரோ!
இன்றென்றால் "**பதவிவெறி இல்லை**" என்றால்
இயம்பட்டும் "**தேர்தல்எமக் கில்லை**', என்றே!;

—திருவாரூர் முத்துராமன்.

ஞல் தான், 'தங்களிடம் கைவசம் இருக்கும் சரக்கு விலைபோகவில்லை என்று தெரிந்ததும், மக்களுக்கு சோஷியலிசத்திலே விருப்பம் ஏற்பட்டுவிட்டது தெரிந்ததும்,

இதோ சோஷியலிசம் என்று கூவுகிறுர்கள்.

ஆனுல் 'லேபிள்' தான் சோஷியலிசம்—சரக்கு அல்ல!

சரக்கு எப்படிப்பட்டது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டினை மட்டும் தருகிறேன், தம்பி! ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்பார்த்தால் போதுமல்லவா?

நில உச்சவரம்பு சட்டம், புரட்சித் திட்டம், புதுமைத் திட்டம், சமதர்மத் திட்டம் என்றெல்லாம் விளம்பரம் செய்துகொண்டு வந்தார்கள்.

நாம் அந்தச் சட்டத்திலே இவர்கள் வேண்டுமென்றே ஏற்படுத்தி வைத்திருந்த ஓட்டைகளைக் காட்டி, சட்டம் சரியாக இல்லை என்று கூறியபோதுகூட, உரத்த குரலெடுத்து மறுத்தார்கள், நிலப்பிரபுத்துவமுறை ஒழிந்துவிடும், ஏழைகளுக்கு ஏற்றம் கிடைக்கும், உழுபவனுக்கு நிலம் கிடைக்கும் என்று.

காங்கிரஸ் கட்சியிலே இடம் பிடித்துக்கொண்டுவிட்ட நிலப்பிரபுக்கள், குறும்புப் புன்னகை உதிர்த்தனர். சட்டம் நிறைவேற்றப்பட்டது. உழுபவன் எந்த அளவு பலன் பெற்றிருக்கிறுன், அந்தச் சட்டத்தின் துணைகொண்டு. ஊரறியுமே! சட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு ஆண்டு பல ஆகிவிட்டன. ஆயினும் உழுபவனுக்கு, இந்தச் சட்டத்தின் மூலம் எந்த அளவு நிலம் கிடைத்திருக்கிறது. நேர்மையிலே நாட்டம் கொண்டுள்ள எவரானும், நடை



முறையிலே இந்தச் சட்டம் எப்படி வடிவமெடுத்திருக்கிறது என்பதைக் கண்டு வெட்கமும் வேதனையும் அடையாமலிருக்க முடியுமா! டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரே கூறினரே, நில உச்சவரம்புச் சட்டம் போட்டோம்; ஆனுல் பெரிய நிலப் பிரபுக்கள் எங்களை ஏய்த்துவிட்டார்கள் என்று.

சட்டம் ஏட்டளவுதான் இருக்கிறது, நாட்டிலே அது நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை என்று இவர்களே வரவழைத்த அமெரிக்க ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டினரே!

சோஷியலிசத்திலே உண்மையான நம்பிக்கையும் அதனைச் செயல்படுத்தவேண்டும் என்பதிலே தீவிரமும் உள்ளவர்களானுல் என்ன செய்திருக்கவேண்டும்? ஓட்டைகளை அடைத்திருக்க வேண்டுமல்லவா? செய்தனரா?

பெயரளவுக்கு நில உச்சவரம்பு சட்டத்தை நிறைவேற்றி வைத்தனரே தவிர அதனுல் உருப்படியான பலன் கிடைத்திருக்கிறதா? கிடைக்கவில்லை என்பதற்குத் தம்பி! அமைச்சர்களின் பேச்சே சான்றளிக்கிறதே!

உச்சவரம்பு சட்டத்தைச் செயல்படுத்தி, நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தை எந்த அளவு பெற்றீர்கள், உழுபவனுக்குத்தந்திட என்ற தகவல் தரும்படிக் கேட்டதற்கு அமைச்சர் அளித்திருக்கிற விவரத்தைப் படித்திருப்பாயே, தம்பி! மலையைக்கெல்லி எலியைப் பிடித்த கதைபோலில்லையா!

உண்மையான நேர்மையான சோஷியலிசத் திட்டம் இப்படியா இருக்கும்?

ஊரை வளையக்கட்டித் தமதாக்கிக்கொண்டுள்ள நிலப்பிரபுக்களிடம் சிக்கிக்கொண்டுள்ள நிலத்திலே உச்சவரம்பு சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம் கிடைத்திடும்; அவ்வளவையும் உழுபவனுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்; அவன் உள்ளம் களிநடமிடும்; கதர் குலுங்கும்; செந்நெல் குன்றெனக் குவியும்; உணவுப் பஞ்சமே ஒழிந்துபோகும்; வெளிநாடுகளுக்கெல்லாம் உணவுப் பொருளை ஏற்றுமதி செய்திடலாம் என்றெல்லாம் எழுச்சிமிக்க குரலில் பேசினுர்களே, நிலைமை என்ன இப்போது என்பதுபற்றி வாய் திறக்கிறுர்களா! கவனித்துப்பாரேன், தம்பி!

உச்சவரம்புச் சட்டத்தின் மூலம், எவ்வளவு நிலம் பெறப்பட்டது என்பதுபற்றி அமைச்சர் தந்த விவரத்தைப் பார்த்துவிட்டு, இந்த ஆட்சியினர் உண்மையான சோஷியலிஸ்டுகளா என்பதுபற்றிய தீர்ப்பு அளிக்கும்படி மக்களைக் கேட்டுக்கொண்டால் என்ன விதமான தீர்ப்புக் கிடைக்கும்?

உச்சவரம்பு சட்டத்தின்படி கிடைத்துள்ள நில அளவு

மாவட்டம்		நஞ்சை-ஏகர்		புஞ்சை-ஏகர்
செங்கற்பட்டு	—	87·89	—	269'89
வடாற்காடு	—	146·43	—	198·96
தென்ஞற்காடு	—	337·63	—	348·63
தஞ்சாவூர்	—	711·95	—	68·69
திருச்சி	—	184·65	—	283·88
சேலம்	—	12·28	—	217·90
தர்மபுரி	—	73.03	—	344·72
மதுரை	—	59·23	—	1135 330
கோவை	—	4·47	—	334·88
ராமநாதபுரம்	—	91·93	—	30·92
நெல்லை	—	18·29	—	484·38

தம்பி! அமைச்சர் இராமய்யா அறிவித்துள்ள மகத்தான சாதனை இது! மொத்தத்தில் இதுவரை பெறப்பட்டுள்ள நிலத்தின் அளவு 5445 ஏகர்! புதுமைத் திட்டம்! புரட்சித் திட்டம்! இதுவாம்!! சொல்லிக்கொள்கிறுர்கள் வெட்கமின்றி! மார்தட்டிக்கொள்கிறுர்கள், சோஷியலிசத்தை நடத்துவதாக!! இதை நாடு நம்பவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறுர்கள்.

ஆட்சிப்பீடத்திலே இருப்போர்முன்

கைகட்டி நிற்க
பராக்குக் கூற
பல்லாண்டு பாட
பல்லிளித்துக்கிடக்க
பாதம் தாங்கிட
தலையாட்டிட
பண்டம் மாற்றிட
பேரம் பேசிட

பலர் முன்வருவர்! இது உலக அதிசயங்களிலே ஒன்று அல்ல! திருவிழாக் கூட்டத்திலே, சிறுர்கள் கண்களை அகலத் திறந்துகொண்டு வேடிக்கைப் பார்த்திட வில்லையா, பொம்மைக் கடையை, அதுபோல! ஆட்சியாளர்களின் அங்காடியிலே அடுக்கிக் காட்டப்படும் பொம்மைகள் பளபளப்பானவை, பகட்டானவை! ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு விலை.

காட்டிக்கொடுத்தால் இந்தப்பொம்மை.
அடுத்துக்கெடுத்தால் அந்தப்பொம்மை.
பிளவுமூட்டிஞல் இந்தப்பொம்மை!

என்று ஒவ்வொரு பொம்மைக்கும் 'விலை' குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்த 'வியாபாரம்' இன்றுநேற்றல்ல, மனித மனதிலே ஆசையும் சூழ்ச்சித்திறனும் முளைத்த நாள் தொட்டு இருந்து வருகிறது.

இத்தகையோர் தம்மைச் சுற்றிநின்று சூடம் கொளுத்தி, வந்தனை வழிபாடு செய்வதுகண்டு, நாடே நமதுபக்கம்! என்று எண்ணிக்கொள்வதும் இயல்பு. ஆஞல் நாடு, இத்தகையவர்களைத் தாங்கிக்கொண்டிருக்கிறதே தவிர, நாட்டின் குடிமக்கள், நாணயமான குடிமக்கள் பைப்பாசைக்கு ஆளாகாத குடிமக்கள், கோடி கோடியாக உள்ளனர். அவர்கள்மீது நம்பிக்கை வைத்துத்தான் தம்பி! நாம் பணியாற்றி வருகிறோம். அவர்களின் கண்ணீரைத் துடைத்திட! அவர்கள் புன்னகை பூத்திட! புதுவாழ்வு பெற்றிட.

போலி சோஷியலிசம் பேசிடும் காங்கிரஸ் அந்த மக்களை வாட்டி எடுக்கிறது என்பதனை எடுத்துக் காட்ட அதிகம் கூறத் தேவையில்லை.

காங்கிரசாரும் மறுக்கமுடியாத ஒரு புள்ளி விவரம் தருகிறேன். தம்பி! இது, நாலாவது ஐந்தாண்டுத் திட்ட விளக்கத்துக்காக காங்கிரஸ் சர்க்கார் வெளியிட்டுள்ள புள்ளி விவரம். நாட்டுமக்களை இத்த ஆட்சி எந்த இலட்சணத்தில் வைத்திருக்கிறது என்பதைக் காட்டிடுவது:

இன்று

430 இலட்சம் மக்கள்	**—**	**நாள் ஒன்றுக்கு 30-பைசாவும்**
430-இலட்சம் மக்கள்	**—**	**42-பைசாவும்**
460-இலட்சம் மக்கள்	**—**	**51-பைசாவும்**
430-இலட்சம் மக்கள்	**—**	**59-பைசாவும்**

வருவாயாகப் பெறுகிருர்கள்!

எப்படி இருக்கும் இந்த எளியோரின் வேதனை என்பதனை விளக்கிடவா வேண்டும்!!

இந்த வேதனை நிலையை மூட்டிக்கொண்டு வருபவர்கள், சோஷியலிசம் வேறு பேசுவது, துகிலுரிந்த துச்சாதனன், துரௌபதிக்கு விலையுயர்ந்த பட்டாடை வாங்கித் தரப்போகிறேன் என்று கூறுவதற்கு ஒப்பானது அல்லவா.

ஏழைகளை வேதனையில் ஆழ்த்திவிட்டு, ஏழ்மை இந்த அளவு படருவதற்குக் காரணமாக உள்ள முதலாளித்தனத்துக்குத் துணை இருந்துகொண்டே, காங்கிரசாட்சி சோஷியலிசம் பேசுகிறது. நியாயமா?

இல்லை! இல்லை! இல்லை! என்ற முழக்கம் எங்கும் கேட்கிறது.

அந்த முழக்கம் மூட்டிவிடும் கலக்கம் காமராஜரைத் துரத்துகிறது, கிராமம் கிராமமாக!—மாலையிலே பொதுமக்களை மயக்க—காலையிலே ஊழியர்களை உற்சாகப்படுத்த — இடையிலே வலைவீச—முதலாளிமார்களை உலுக்கிப் பணம் திரட்ட!!

அவருடைய ` பரபரப்புமிக்க நடவடிக்கையும், கொதிப்புமிக்க பேச்சும், தம்பி! காங்கிரசாட்சிக்கு எதிராகத் திரண்டு எழுந்துள்ள எதிர்ப்பினை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இதனை உணர்ந்திடின் தம்பி! நமக்கெல்லாம் புதிய உற்சாகமும், உறுதியும், பிறந்திடத்தானே செய்யும்.

அந்த வேகத்துடன் நமது தோழர்கள் தீவிரமாகப் பணியாற்றுகிருர்கள்.

தம்பி! ஒவ்வொரு நாளும் உன்னை நீயே கேட்டுக் கொள்ள வேண்டும், **இன்று நாம் செய்தது என்ன? எந்த வகையில் கழகப் பணியாற்றிஞேம்?** என்பதனை. ஏன் என்கிருயோ தம்பி! காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் புனிதப் பணிக்கு நான், **உன்னைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.**

உருட்டி மிரட்டிப் பேசிடுபவனல்ல நான்—நான் உன்னேடு இருப்பவன்-உயர ஏறிவிட்டவன் அல்ல.

என்னைத் தேடி இலட்சாதிபதிகள் வரமாட்டார்கள். நான் உனக்காகப் பணியாற்றுபவன் என்பது அவர்களுக்குத் தெரியும்!

நமது மாளிகைக்கு விருந்துண்ண வருக! என்று என்னை எவரும் வேண்டிக் கேட்டுக்கொள்ள மாட்டார்கள்; நான் பர்மிட் லைசென்சு கொடுப்பவனல்ல!

ஊர்க்கோடியிலே மணிக் கணக்கிலே காத்திருந்து எனக்கு மாலை அணிவிக்க சீமான்கள் நின்றுகொண்டிருக்க மாட்டார்கள்; நான் பதவியைத் தந்திட வல்லவன் அல்ல.



நான் இன்னின்னது பேசினேன் — இத்தனை முறை கை தட்டினார்கள்—இத்தனை மாலைகள் போட்டார்கள்—என்று இதழ்கள் வெளியிடாது-நான் அவர்கள் போற்றிப் புகழ்ந்திடும் இடத்திலே இல்லை.

நான், அவனுக்கு என்ன தெரியும், இவனுக்கு என்ன தெரியும், எவனுக்கு என்ன யோக்யதை இருக்கிறது என்றெல்லாம் பேசிட முடியாது—என் இயல்பு இடந் தராது-அப்படிப் பேசினாலும் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் – ஏனெனில் நான் தர்பாரில் இடம் பெற்றவன் அல்ல.

கூப்பிடு அவரை! கொண்டு வா இவரை! என்று நான் கட்டளை பிறப்பிக்க முடியாது—ஏனெனில் எவரும் மதித்தே ஆகவேண்டும் என்ற பகட்டான பதவிப் பீடத்திலே நான் இல்லை.

நான் இவைகள் கிடைக்கவில்லையே என்று ஏக்கப் படவுமில்லை; கிடைக்கும் என்று எதிர்பார்க்கவுமில்லை.

நான் எதிர்பார்ப்பது ஒன்றுதான், உன் இதயத்தில் இடம்.

எனக்குக் கிடைத்திருப்பதும் ஒன்றுதான், உன் இதயத்தில் எனக்கோர் இடம்.

நான் விளக்கிக் காட்ட முடியும்—செய்கிறேன்.

வேண்டுகோள் விடமுடியும்-செய்கிறேன்.

உன் ஆதரவை, உழைப்பைக் கேட்க முடியும்-கேட்கிறேன்.

என்னால் முடிந்ததை நான் செய்கிறேன்; உன்னால் முடியக்கூடிய தனைத்தையும் தம்பி! நீ செய்திட வேண்டும்.

செய்திடின் தம்பி! மாலை போடவரும் கனவான், மாளிகையில் விருந்து வைக்கும் சீமான், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் பூமான் ஆகியோரின் துணையில்லையே என்று எவரேனும் என்னிடம் கூறிடினும், எனக்கு ஏன் அந்தப் போலிச் சரக்கு, அதோ என் உடன் பிறந்தார்களின் உறுதியைப் பார்! உள்ளன்பைப் பார்! உற்சாகத்தைப் பார்! எந்த இன்னலையும் ஏற்றுக்கொள்ளும் துணையைப் பார்! தனக்கென எதனையும் தேடிடாத தூய்மையைப் பார்! அந்த உத்தமன் அளித்திடும் உழைப்பைப் பார்! அந்தச் சக்தியின் மீது பகட்டு உலகினர் திரட்டித் தரும் படைக்கலன் பாய்ந்திடின், படைக்கலன் நொறுங்கும்—அறிவேன் நான்—என்று கூறிடுவேன்—எழுச்சியுடன் — நம்பிக்கையுடன்.

உன்னைத்தான் நம்பியிருக்கிறேன், தம்பி! உன்னைத்தான்.

அண்ணன்,

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்

சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

(Recognised by Central Board of Indigenous Madicine Madras)

பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
73-A, சிங்காரத் தோப்பு, திருச்சி-8.
28. நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2.
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A, கண்ணம்மாள்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.

மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்,** ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கசங்கிக் கருகிவிடக்கூடாதே -என்று இதோ வடிக்கிறேன் கண்ணீர்! இடையே ஓர் இரவு — அந்த அதிசய இரவு, தனித்தனி உலகங்களை அல்லவா உண்டாக்கிவிட்டது. நேற்று உதயமான கதிரவனைக் கண்ட செந்தாமரைக்கும், இன்று கண்ணீரோடு நோக்கும் செந்தாமரைக்கும் எவ்வளவு வித்தியாசம்? அய்யோ, அவர்கதி என்னவாகுமோ — என் வாழ்வு என்னவாகுமோ? என்று சிந்தும் கண்ணீரோடு, சிந்தித்துக்கொண்டிருந்த செந்தாமரை அம்மா! என்று சிதாரி அழைத்ததும் திரும்பிப் பார்த்தாள்.

அவரைப் பார்த்தாயா? எங்கிருக்கிறார்? என்ன சொன்னார்? வருகிறேன் என்றாரா என்று அவள் துடிப்போடு கேட்டாள்.

அவர் வீட்டிற்கும் சென்றேன்! மாரிமுத்து வீட்டிற்கும் சென்றேன்! எங்கும் அவர் இல்லையம்மா!

"அப்படியானால் அவர் அந்த மலைக்குகைக்குச் சென்றுவிட்டாரா? அய்யோ, தூமகேது அவரைப் பிடித்துவிடுவானே! நான் வெட்டிய பள்ளத்திலேயே நான் விழுந்துவிட்டேனே! அய்யோ! என்று கதறிக்கொண்டே, பக்கத்தில் இருந்த ஆசனத்தில் அவள் சாய்ந்துவிட்டாள்.

"அம்மா, இதெல்லாம் என்ன— கண்ணீர்விடுவதும், கதறுவதும்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! தூங்கிக்கொண்டிருந்த என்னை எழுப்பி உடனே சோலையப்பனை அழைத்துவா என்றீர்! தெரிந்துகொள்ளவேண்டிய இரகசியம் இன்னும் ஏதோ 'மிச்சம் இருக்கிறது போலும் என்று நினைத்து, தூக்கக் கண்ணோடு ஓடினேன்! இப்பொழுது தாங்கள் அயர்வதையும் அழுவதையும் பார்த்தால்......'

'நேற்றிரவு நீ செய்த உபதேசம் பொய்யாகவில்லை சிதாரி!'

'அப்படியென்றால்......'

'சோலையப்பன் எனக்கு அத்தான் ஆகிவிட்டாரடி!'

நான் எவ்வளவோ எச்சரிக்கை செய்தேனே. அம்மா!'

'நான் சுய நினைவோடு சிந்திக்க, அவர்விட்டால்தானே?'

'நாளை காலை குளக்கரைக்குச் செல்லுங்கள், சோலையப்பனை ஓலைகளோடு பிடித்துச் சிறையில் தள்ளுங்கள், என்று தூமகேதுவிடம் சொல்லிவிட்டு அதே இரவு உம்மை அவர் கறைபடுத்த விட்டுவிட்டீர்களே!'

'நான் என்னடி செய்வது—அவர் கட்டிப் பிடித்தபோது கன்னத்தில் கூட அடித்தேன்! வர் விடவில்லை கோபத்தால் துடித்த என் நரம்புகளில் ஏதோ ஒரு புதுமையான உணர்ச்சி......'

'சரி அம்மா சகலமும் புரிகிறது! இவ்வளவு நாட்களாக நாம் பட்ட தொல்லைகள் போட்ட வேடங்கள் எல்லாமே விழலுக்கு இறைத்த நீராகிவிட்டன!'

"நான் யார் என்பதையே மறந்துவிட்டேன், சிதாரி! கொஞ்சகாலத்திற்கு மறந்துவிட வேண்டியது நல்லதும்கூட! இனி அவர் வாழ்வுதான் என் வாழ்வு! அவர் விருப்பந்தான், என் விருப்பம்! அவர் ஆசைதான் என் ஆசை! சிதாரி, என்னைக் கோபமாகப் பார்க்காதே—வெறுத்துப் பேசாதே! உன்னைவிட எனக்கு யார் துணையிருக்கிறார்கள்? என் இதய ஆசைகளை யாரிடம் வெளியிடுவேன்? என் கண்ணீரை யார் எதிரில் கொட்டிக் காட்டுவேன்? நீதானே எனக்கு அன்னைக்கு அன்னை, தமக்கைக்குத் தமக்கை, தோழிக்குத் தோழி. நம் இலட்சியம் தோல்வியடைந்துவிட்டது என்று எண்ணாதே, சிதாரி—இன்னமும் வெற்றியடைய மார்க்கமிருக்கிறது !இத்தனை நாள் நீ செய்த உதவிகள் எனக்காகச் செய்தவை அல்ல. நீ வளர்ந்த இடத்திற்காகச் செய்தவை! இனி நீ செய்யப்போகும் உதவிகள் இருக்கின்றனவே, அவைதாம் எனக்காக — என் வாழ்விற்காகச் செய்தவையாக நான் கருதுவேன்!"

"வளர்ந்த இடத்திற்காகவோ, பழகிய பாசத்திற்காகவோ—அது எனக்குத் தெரியாது! ஆனால் நீங்கள் கண்ணீர்விட்டால் — அதை என்னால் தாளமுடியாது அம்மா— தாளமுடியாது!"

"சிதாரி"

"சொல்லுங்கள் அம்மா, எதுவாயினும் செய்கிறேன்! தாங்கள் மலர்ந்த முகத்தோடு இருந்தால், அதுவே போதும் அம்மா எனக்கு!"

"மலைக் குகையைப்பற்றிச் சொன்னேனே — அந்த இடத்தை உன்னால் கண்டுபிடிக்க முடியுமா?"

"அதற்கு என்ன அம்மா, எப்படியாவது கண்டுபிடித்துவிடுகிறேன்!"

"சிதாரி, உடனே புறப்படு நீ சென்று அவசரமென்று சொல்லி அவரை அழைத்துக்கொண்டு வந்துவிடு! வரமறுத்தால் — எனக்கு ஆபத்து என்று சொல்! பறந்து வந்துவிடுவார்! உனக்கு முன்னால்

ஏஜண்டுகள் தேவை

மலையாள வைத்தியசாலை

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்) மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனைசெய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: சுலைமான்

மலையாள வைத்தியசாலை,

நெ. 145, R S. ரோடு, :: திண்டுக்கல்-3

தூமகேதுவோ அல்லது அவனது ஆட்களோ அவ்விடத்தை முற்றுகையிட்டுவிட்டார்கள் என்பதைக் கண்டால், நீ பதுங்கிக்கொள்! அவர்களிடம் சிக்கிக்கொள்ளாதே! தக்க நேரம்பார்த்து, நேராக இங்கே வந்துவிடு! என்ன செய்வது என்பதைப்பற்றிப் பிறகு யோசித்துக்கொள்ளலாம்!'' என்று சொல்லிவிட்டு, கன்னங்களில் வழிந்த கண்ணீரைச் செந்தாமரை துடைத்துக்கொண்ட அதே நேரத்தில் குகையினுள் நின்றிருந்த சோலையப்பனும் தன் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டான்.

சோலையப்பன் நின்றிருந்த இடத்திற்கு அருகே, மேலே உள்ள சந்தின் வழியாகச் சூரியனின் கதிர்கள் உள்ளே புகுந்துவந்து, அந்தக் குகை அறையின் பாதிபாகத்திற்கு வெளிச்சத்தைத் தந்தது. அந்த அறையை வந்து சேர்வதற்கு முன்புள்ள இருண்ட வழியைக் கடந்து வரக் கொண்டுவந்த தீப்பந்தம், ஒரு மூலையில் சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்தது, அந்த எரிபந்தத்திற்குச் சிறிது தள்ளி எதிர்புறத்தில் கூரையிலிருந்து நீளமான ஆலம் விழுதுகள் தொங்கிக்கொண்டிருந்தன.

கல் மேடைகளின் மீது கட்டுக்கட்டாக ஓலைச்சுவடிகள் வைக்கப்பட்டிருந்தன. போர்க்களம்சென்று வெற்றி வாகையோடு திரும்பி வந்த தன் படைவீரர்களின் அணிவகுப்பைப் பார்த்து, அரசன் புரிப்பு முகங்காட்டுவானே - அதைப்போல அந்த ஓலைக்கட்டுகளைப் பார்த்துப் பார்த்துச் சோலையப்பன் களித்தான்.

"பாண்டிய நாட்டின் பகுத்தறிவுச் சிங்கங்களின் இதய ஓவியங்கள் இதோ!'' என்று அந்தச் சுவடிகளைச் சுட்டிக்காட்டித் தனக்குத் தானே அவன் பேசிக்கொண்டான்.

கீழே சிதறிக்கிடந்த படித்த ஓலைகளை ஒழுங்காக எடுத்து அடுக்கிக் கட்டி ஒரு மேடைமீது வைத்துவிட்டு, வேறொரு கட்டை எடுத்தான்! பிரித்தான்! படித்தான்!

முகப்பில்:

அண்மையில் இலங்கை சென்றிருந்தபோது, கொழும்பு சபா நாயகருடன் திரு. எஸ். எஸ். ராசேந்திரன் காணப்படுகிறார்.

"அண்ணா பொன்னையா அவர்களே, வணக்கம்.

தங்கள் ஓலை கிடைத்தது. அதை ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல —குறைந்தது நூறு முறையாவது திருப்பித் திருப்பிப் படித்திருப்பேன்! படிக்கப்படிக்கத் திகட்டாத சொற்கள்! உணர்ச்சியூட்டும் கருத்துக்கள்! கோழையையும் வீரனாக்கும் எழுச்சி முரசு அது!

சங்கம் வளர்த்த தமிழ்ப் புலவர்கள் இன்ப நடைபோட்ட பாண்டிய நாட்டில், இன்று புராணப் புளுகர்கள் ஆனந்த ஆரவாரம் செய்கிறார்களே என்று நேத்திரம் கலங்க, நெஞ்சுப் பதைக்கச் சிந்திக்கும் நல்ல தம்பிகளில் நானும் ஒருவன்.

நாட்டின் தற்போதைய அநீதியையும், அக்கிரமத்தையும், ஆபாசத்தையும் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கிறார்களே, தமிழர்! இவர்களின் நல்லறிவு எங்கே? நற்பண்பு எங்கே? அறியாமையையும் ஆணவத்தையும் சுட்டெரிக்கும் ஆற்றல் எங்கே?

அகநானூற்றின் வழித்தோன்றல்கள் இன்று ஒருவருமே இல்லையா?

அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையாளர் இன்று ஒருவர்கூட இல்லையா? அவர்களின் சந்ததியே பூண்டோடு அழிந்துவிட்டதா?

இப்படியெல்லாம் சிந்தித்து, தன்னந் தனியனாகத் தவித்துக் கொண்டிருந்த நான், தங்களைச் சந்தித்தேன்!

பாண்டிய நாட்டை அழியவிடமாட்டோம், பழையபடியே அதைப் பகுத்தறிவுச் சோலையாக்குவோம், பாவாணர்களின் நாவாணர்களின் பாசறையாக்குவோம் என்று வீர முழக்கம் செய்தீர்கள்! ஆகா, பாண்டிய நாடு இனி தலை நிமிர்ந்து நிற்கும், அதற்கு வளம் உண்டு என்றெண்ணி, என் உள்ளம் கூத்தாட உடல் பூரித்துப் பருத்தது.

சிதறிக் கிடக்கும் தமிழ் வேல்களையெல்லாம் ஒன்று திரட்டி, மிரட்டி வாழ்வோரை விரட்டியடிக்க, பாலையைச் சோலையாக்கப் பாடுபடும் தங்களின் படையிலே, என்னையும் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளும்படி நேரில் வேண்டினேன்! இன்முகம் காட்டி, ஊருக்குப் போ, ஓலை அனுப்புகிறேன் என்றீர். ஓலை வந்தது—என் உள்ளமெல்லாம் பூரித்து, நாட்டுப் பணியிலே உயிரையும் உடைமையையும் தரச் சித்தமாக இருக்கிறேன்-எத்துணை எதிர்ப்புகள் எழுந்தாலும் சலிக்கமாட்டேன், எத்துணைத் தொல்லைகள் கொட்டினாலும் பொருட்படுத்தமாட்டேன் - என்ற உறுதியைத் தெரிவிக்கவே, இந்த ஓலை எழுதியிருக்கிறேன். வணக்கம்; தொண்டன்,

—ஈச்சம்பட்டி இளந்திரையன்

இந்த ஓலையைப் படித்துப்பார்த்ததும், சோலையப்பனின் மனம் இன்பக் களிநடனம் செய்தது.

"பாண்டியநாடே இனி உனக்கு விடுதலைதான்! உத்தமர்கள் ஒன்று சேர்ந்துவிட்டனர்! உன் நிலையைக் கண்டு உணர்ச்சிப் பெற்றுவிட்டனர்! இனி தாழ்வு இல்லை; வாழ்வு உண்டு! உலுத்தர்களைச் சுட்டுப் பொசுக்கும் தருணம் நெருங்கிவிட்டது! நயவஞ்சகர்களின் தலை தாழப் போகிறது-நல்லவர்களின் கை ஓங்கப்போகிறது! என்று களிப்போடு தனக்குத்தானே பேசிக்கொண்டு ஆலம் விழுதுகளைப் பிடித்து ஊஞ்சல் ஆட ஆரம்பித்துவிட்டான்.

'இதோ! இதோ! இவ்வளவு ஓலைகளும் ஒவ்வொரு கடமை வீரனின் இதய ஒலியேயாகும்! கதியில்லையே என்று இனி கலங்கத் தேவையில்லை! பாண்டிய திருநாடே உன் புதல்வர்களின் விடுதலைப்படை

விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஏப்ரல் மாத பில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவறாமல் அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிறோம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
"காஞ்சி"

தயாராகிவிட்டது! தடைகளை இனி தவிடுபொடியாக்குவோம்! மதோன் மத்தர்களின் வாழ்வை மண்மூடிப் போகச் செய்வோம்!' என்று வீர முழக்கமிட்டுக் கீழே குதித்து ஏறு நடை போட ஆரம்பித்தான்.

"என்நாடே! தாய் நாடே, பொன்னாடே இனி நீ என்று தமிழகத்தின் திலகமாய் விளங்கப்போகிறாய்! என உணர்ச்சியின் பெருக்கால், அவன் தன்னை மறந்து, ஏதேதோ பேசினான். பேசிப் பேசி அவன் தொண்டையே வரண்டுவிட்டது.

தாகம் அதிகமாகவே, குகைக்கு வெளியிலுள்ள சுனையில் நீர் பருகிவிட்டு வரலாம் என்று கையில் தீப் பந்தத்தை எடுத்துக் கொண்டு, வெளியில் வந்தான்.

மங்கலான இடத்திலிருந்துவிட்டு, சூரிய வெளிச்சத்தைக் கண்டதும் அவன் கண் கூசியது. குனிந்து சுனையின் குளிர்ந்த நீரை அள்ளி யள்ளிப் பருகியபோது, ஆடலழகி செந்தாமரையின் அழகு முகம் அவன் மனக்கண்முன் தோன்றியது.

"செந்தாமரையைப் பற்றி எவ்வளவு தவறாக எண்ணினேன்—எப்படித் தாறுமாறாகப் பேசினேன்! அவ்வளவையும் சகித்துக்கொண்டாளே—அந்த சந்தன மேனியாள்! என் இலட்சியத்திற்கேற்ற கண்மணி கிடைத்துவிட்டாள்! வாழ்க்கையில் இனி எனக்கு என்ன குறை? என் பைங்கிளியைப் பார்க்க இன்றிரவும் நான் போகவேண்டாமா! அந்தத் தேன்மொழியாள் என் வருகைக்காகக் காத்திருப்பாளே!...என்னைக் கண்டதும் ஓடிவந்து, இரு கைகளையும் பிடித்துக்கொண்டு, மாடிக்கு அழைத்துச் செல்வாள்! அத்தான் என்பாள்—நான் அகங்குளிர்வேன் கண்ணே என்பேன் —கடைக் கண்ணால் பார்த்துக் குறும்புப் புன்னகை செய்வாள்! என் கன்னத்திலே கன்னத்தை ஒற்றியெடுப்பாள்! சிரிப்போடு சிரிப்பு கலக்கும்! உதட்டோடு உதடு இணையும்! ஆகா அந்த அணைப்பு இருக்கிறதே—அதை எண்ணினாலே உடலிலே உண்டாகும் சூடு இருக்கிறதே, இந்தப்பனிச்சுனையில்மூழ்கியெழுந்தால் கூட அது தணியாது! செந்தாமரை எனக்காகவே பிறந்து வளர்ந்த அதிசயவல்லி! அடைதற்கரிய அற்புதவல்லி! மகிழ்ச்சி தந்த மதுரவல்லி! என் இதயத்திற்கேற்ற இன்பவல்லி என்று கூத்தாடும் மனதோடு குனிந்திருந்தவன் நிமிர்ந்தபோது, சில போர் வீரர்களோடு தூமகேது அந்தக் குகையை நோக்கி மலையடிவாரத்தில் வந்துகொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

'ஐயோ! வந்துவிட்டதே ஆபத்து!' என்று அவன் திடுக்கிட்ட உள்ளத்தோடு, சுற்றும் முற்றும் பார்த்தான்.

'இங்கு நான் வருவதும் போவதும், இந்தக் கழுகின் கண்ணிற்கு எப்படியோ தெரிந்துவிட்டதே! அவனது ஆட்களும் ஏறிவந்துகொண்டிருந்தனர்.

'அந்த ஓலைகள், எதிரிகளிடம் எப்படியும் சிக்காமல் பார்த்துக்கொள்! அப்படி ஒரு ஆபத்து வருமென்று எதிர்பார்த்தால் அவற்றை உடனே அழித்துவிடு!' என்று பொன்னையாவின் ஓலையில் படித்த வரிகள் அவன் நினைவிற்கு வந்தன.

'ஆமாம்; அந்த ஓலைகள் இவனிடம் சிக்கினால், ஆயிரக்கணக்கான

செந்தாமரை நம் இன்பக்கோட்டை இதோ இடிந்து தரைமட்டமாகிவிட்டது, கண்ணே! பாண்டிய நாடே உனக்கு விடுதலை கிடைத்துவிட்டதென்று எவ்வளவு ஆனந்தமடைந்தேன், ஆடிக்குதித்தேன்! அந்தப் பூரிப்பு இவ்வளவு விரைவிலா புகைந்து போய்விடவேண்டும்!......தூமகேது வருகிறானே—இனி நான் என்ன செய்வேன்! இப்படியே புதருக்குள் பதுங்கி ஓடித் தப்பிவிடலாமா? அப்பொழுது குகைக்குள் இருக்கும் ஓலைகள்—நாட்டின் கண்மணிகளின் இதயக் குரல்கள் என்னாவது? இந்த வஞ்சகனிடம் அவற்றைச்சிக்கவிடலாமா? அவற்றைப் படித்துப் பார்த்து இந்த நீறுபூசி ஆடிக்குதித்து, விடுதலை வீரர்களைத் தேடிப்பிடித்துத் தூக்கு மேடையில் நிற்கவைப்பானே?" என்று நினைத்து, அவர்கள் எங்கே வருகிறார்கள் என்று எட்டிப் பார்த்தான். மலையின்பாதி உயரத்தில் சால்போன்ற வயிறு குலுங்க அந்தச் சண்டாளனும், உத்தமர்கள் ஆவி துறக்கவேண்டி நேரிடும்! அதற்கு நான் இடம் தரலாமா? கூடாது! உள்ளே சென்று, அவற்றை நான் அழித்துக்கொண்டிருக்கும்போது, அவர்கள் வந்துவிடுவார்களே! அதற்காக நான் அஞ்சுவதா! வரட்டும்! என்னைக் கைது செய்வார்கள்-தூக்கில் தொங்கவிடுவார்கள்! பொன்னையாவின் கல்லறையின் பக்கத்தில், சோலையப்பனின் கல்லறை!' என்று தீர்மானித்துக்கொண்டு, ஓடித் தீப் பந்தத்தை எடுத்துக்கொண்டு, உள்ளே சென்றான்.

அவசர அவசரமாக எல்லா ஓலைக் கட்டுகளையும் ஒன்றாக எடுத்துப் போட்டு அவற்றிற்குத் தீவைத்தான்.

கருப்பு நிறப் புகையோடு அந்த ஓலைகள் பற்றியெரியத் தொடங்கின.

அவன் தந்தையின் பிணமும் அன்பு அன்னையின் உடலும் தீயில்

3-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தியா இதுவரையில், அணு ஆயுதக்கொள்கையில் கடைபிடித்துவந்த முறைகள் சரியானவைதாமா? என்பதனை மறுஆய்வு செய்து தீரவேண்டும். மக்களவையில் பாதுகாப்பு அமைச்சர் சுவரண்சிங், கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டிய கட்டம் எதுவும் வந்துவிடவில்லை என்று கூறியதுதான் அரசின் திட்டவட்டமான கொள்கையாக முடிவு செய்துவிடக் கூடாது.

இந்தியா, தன் அணுசக்தி அறிவை, ஆக்கப் பணிகளில் இதுவரையில் பயன்படுத்தி வந்திருப்பது போலவே, இனியும் இருக்கும்; மேற்கொண்டும் தன் அறிவை, அணுசக்தித் துறையில் பெருக்கிக்கொள்ளும் என்று பிரதமர் இந்திராகாந்தி அறிவித்துள்ளார்.

மக்களவையில், இதுபற்றிப் பலத்த வாக்குவாத மேற்பட்டுள்ளது. பல உறுப்பினர்கள், அரசின் தற்போதைய அணுசக்திக் கொள்கையைப் பலமாகக் கண்டித்திருக்கிறார்கள். இந்தியாவும் அணுகுண்டுத் தயாரிக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்தியா, ஒன்றிரண்டு குண்டுகளைத் தயாரிப்பதனால் மட்டும் இந்தப் பிரச்னை அடியோடு தீர்ந்துவிடப் போவதில்லை. பிற நாடுகளைப்போல், அது தொடர்ந்து இத்துறையில் ஈடுபட்டுத் தீரவேண்டும். இந்த வசதியையும் வாய்ப்பையும் பெற இந்தியா, தன் சுயபலத்தை மட்டும் நம்ப முடியுமா?

வெடிப்புச் சத்தம் கேட்டவுடனேயே, அமெரிக்கா அணு ஆயுத உதவி கோருபவர்களுக்கு, உதவி செய்யத் தயார் என்று அறிவிப்புக் கொடுத்துள்ளது.

வெடித்த வேகத்திலேயே சூ-யென்-லாயும், ஆக்கிரமிப்புக் காரியங்களுக்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்தமாட்டோம் என்று அறிவித்துள்ளார். சூவின் இந்த மாய்மாலங்களை — கடந்த கால அனுபவங்கள் ஒப்புக்கொள்ளச் செய்யவில்லை. உலகத்தின் சமாதானத்துக்காகவே தாங்கள் அணு ஆயுதச் சோதனைகள் செய்வதும், ஆயுதத் தயாரிப்பிலீடுபடுவதும்' என்கிறார் சூ.

உலகத்தின் நலனுக்காகவென்று அவர் கூறியவை ஏராளம். கூறப்பட்டவைகள், எந்த அளவுக்கு நலனுக்கான காரியங்களிலீடுபடுத்தப்பட்டன என்பதுதான் இன்றைய வினா!

எனவே, இந்தியா, திட்டங்கள் மூலம் நாட்டுக்குப் புத்துயிர் ஊட்டிக்கொண்டு வருவதாகக் கூறிக்கொள்ளும் இந்த வேளையில், இத்தகு வேதனை நிரம்பிய சோதனைகளையும் சந்தித்தே தீரவேண்டியிருக்கலாம்.

அணு ஆயுதப் போட்டியில், இந்தியா எத்தகைய முடிவு எடுத்தாலும், அம் முடிவு இந்நாட்டு மக்களையும், அவர்களது ஜீவாதார உரிமைகளையும், வாழ்க்கை நலன்களையும் பாதிக்கக் கூடியதாக மட்டும் நிச்சயம் இருக்கக்கூடாது.

❋

வெந்து கருகியபோதுகூட அவன் அவ்வளவு கலங்கவில்லை—கண்ணீர் விடவில்லை! அந்த ஓலைகள் எரிந்தபோது அவன் அவ்வளவு துடிப்பும் துக்கமும் கொண்டான்.

தூயமணிகளின் துல்லியமான இதயங்களைச் சுட்டுப் பொசுக்கும் தீயே! என்னைப்போல நீயும் அழுகிறாயா? அழாதே! நீ ஓங்கியெழு! உயர்ந்து உயர்ந்து தாவியெழு! எவ்வளவு பேர் வந்தாலும் அணைக்க முடியாதபடி, வான் நோக்கித் துள்ளியெழு! இந்த வையகத்தில், கயவனும் கபடனும் சூதுக்காரனும் சுயநலக்காரனும் பூண்டோடு தீய்ந்து கருகிச் சாம்பலாகும்மட்டும் நீ தலைதாழ்த்தாதே! தீயே எட்டுத்திக்கிலும் நீ பரவிவா! நாட்டின் எதிரிகளை, நல்லவர்களின் பகைவர்களை, மக்களின் துரோகிகளைச் சுட்டுப் பொசுக்கு! நீ சுட்டுப் பொசுக்கு!' என்று பேசிக்கொண்டிருந்தவன், உள்ளே காலடிச் சப்தம் கேட்டதும், தீயை உற்றுப் பார்த்தான்,

'சாம்பல்! சாம்பல்! எல்லாம் சாம்பலாகிவிட்டன!'' என்ற உள்ளத் திருப்தியோடு, பெருமூச்சு விட்டான்.

''சோலையப்பா!''

தூமகேதுவின் குரலைக் கேட்டதும், சோலையப்பன் நிதானமாகப் பார்வையைத் திருப்பினான்.

''தீயின் பசிக்கு ஓலைகளை உணவாக்கி விட்டாயா?''

''ஆமாம், இன்னமும் அதன் பசி அடங்கவில்லையாம்!''

''ஏன், உன்னையே அதற்கு உணவாக்கப் பார்க்கிறாயா? தப்ப முடியாது சோலையப்பா, இனி தப்ப முடியாது!'' என்று குறும்போடும் கோபத்தோடும் கூறிய தூமகேது, போர் வீரர்களைப் பார்த்து, ''பூட்டுங்கள் விலங்கை! இழுத்துவாருங்கள் வெளியே!'' என்று கட்டளையிட்டான்.

கைகளில் விலங்கு பூட்டிக் குகைக்கு வெளியே இழுத்து வந்த சோலையப்பனைக் கண்டு, மரத்தின் மறைவில் பதுங்கி நின்ற சிதாரி கண்கலங்கினாள், ''இந்தச்சோகக் காட்சியைத் தங்களிடம், எப்படியம்மா வந்து சொல்லுவேன்?'' என்று முணுமுணுத்தபடி, அந்த மரத்தின் அடியிலேயே சோர்ந்து உட்கார்ந்துவிட்டாள்.

[வளரும்]

அதுதான் முக்கியம்!

நீங்கள் எந்தப் பதவியில் இருக்கிறீர்கள் என்பது முக்கியம் அல்ல; இருக்கிற பதவியில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். பதவி உங்களுக்குப் பெருமை தருவதில்லை. நீங்கள்தான் பதவியைப் பெருமைப் படுத்தவேண்டும்.

—பெட்ளூர்க்

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் ,சி. என். அண்ணாதுரை.